**தலைப்பு – 112 வெளிநாட்டலுவல்கள் அமைச்சு**

----------------------------------------------------------------------------------

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

------------------------------------------------------------------------------------------------------------------

**கணக்காய்வின் நோக்கெல்லை**

--------------------------------------------------

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தல்களினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்ககூடியதாகவிருந்து பதவியணியினர் ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள் ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்கும் வகையில் பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கொண்டிராத கணக்குகளையும் இணக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக்

கட்டுப்பாட்டைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இதன் (அ) முதல் (எ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

தெரிவுக் கணக்காய்வின் போது அமைச்சால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| வீடமைப்பு பொருட் பதிவேடு | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவு |
| வீடமைப்பு காத்திருப்போர் பதிவேடு | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 4.3.4 ஆம் பிரிவு |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

வெளிநாட்டு தூதரகத்திற்கு உரித்தான ரூபா 328,668,393 தொகையான நிர்மாண நடவடிக்கைகளும், ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த 09 வாகனங்களுக்கு உரித்தான ரூபா 3,777,948 கூட்டுத்தொகையான நட்டங்களும் இழப்புகளும் 05 ஊழியர்களுக்கு உரித்தான ரூபா 24,494,445 தொகையான ஊழியர் நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் என்பவற்றுடன் தொடர்புடைய கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடப்படக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 58,765,372 ஆகக் காணப்பட்டது.

**(ஈ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(i) மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 10,140,337,250 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இதில் ரூபா 10,005,451,601 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 134,885,649 அதாவது 1.3 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

**2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 7,718,370,950 | 7,702,141,747 | 16,229,203 | 0.2 |
| மூலதனம் | 2,421,966,300 | 2,303,309,854 | 118,656,446 | 4.9 |
| கூட்டுத்தொகை | 10,140,337,250 | 10,005,451,601 | 134,885,649 | 1.3 |

**(ii) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,350,000 தொகையான மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

- 03 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய நிதிஏற்பாட்டில் 61 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரையான வீச்சைக் கொண்டிருந்தது.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| விடய இல | செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11201 | 30,000,000 | 16,863,247 | 18,000,000 | 24,333,895 | 125,000,000 | 92,199,198 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

11201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் அறவீடுகள் நிலுவையாக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,411,683 ஆனதுடன் அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

**(ஊ) கட்டுநிதிக் கணக்குகள்**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 905,745,224 ஆகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| கட்டுநிதிக் கணக்கு இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 7002/0000/00/0035/0008/000 | 63,350,921 |
| 7002/0000/00/0035/0009/000 | 32,271,945 |
| 7002/0000/00/0035/0010/000 | 675,170,151 |
| 7002/0000/00/0035/0011/000 | (463,557,480) |
| 7002/0000/00/0035/0012/000 | 101,950,473 |
| 7002/0000/00/0035/0013/000 | 496,559,214 |
| மொத்தம் | 905,745,224 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் அமைச்சால் தீர்க்கப்பட்டிராத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 891,116,748 ஆகக் காணப்பட்டது.

(ii) அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளின் மீதிகள் அத்திகதியில் தீர்க்கப்பட்டிராத முற்பண மீதிகள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களின் காசு மீதிகள் உள்ளடங்கலாக ரூபா 177,766,484 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

| | | **பெறுமதி** |
|---|---|---|
| | | ரூபா |
| அமைச்சுப் புத்தகங்களில் காணப்படுகின்ற கட்டுநிதி மீதி | | 905,745,224 |
| தீர்க்கப்படாத முற்பணங்கள் | 345,013,347 | |
| தூதரகங்களின் இறுதிக் காசு மீதிகள் | 382,965,393 | |
| அமைச்சில் இருக்க வேண்டிய கட்டுநிதி மீதி | | 727,978,740 |
| வேறுபாடு | | 177,766,484 |

(iii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு தூதரகங்களில் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 333,055,195 தொகையானதுடன் இதில் 05 ஆண்டுகளுக்கு மேல் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 61,855,517 ஆகக் காணப்பட்டது.

(iv) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் பணி பூர்த்தியடைந்த உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் சென்னை உயர் தூதரகத்தால் 03 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உபகட்டுநிதிகள் பணி பூர்த்தியாகிய பின்னர் 81 நாட்கள் தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது.

**(எ) பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,441,991,311 ஆகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| **வைப்புக் கணக்குகளின் இல.** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0006/0071/000 | 35,857,444 |
| 6000/0000/00/0015/0025/000 | 1,406,133,867 |
| மொத்தம் | 1,441,991,311 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 17,688,403 தொகையான 09 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சின் 6000/0000/00/006/0071/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கொடுக்கல்வாங்கல்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டின் பின்னர் அக் கணக்கு செயற்படுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அக் கணக்குகளின் மீதியான ரூபா 35,857,443 தொகை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சினதும் தூதரகங்களினதும் 6000/0000/00/0015/0025/000 ஆம் இலக்க் பொது வைப்புக் கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 631,080,693 தொகையான போதிலும் 2013 ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அம் மீதி ரூபா 873,869,504 ஆகக்

காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 242,788,911 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 1.5.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ''பொது நலவாய மாநாட்டிற்கான செயலாற்றல் படையணி செயலகம்'' இற்கு உரித்தான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 24 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் ரூபா 10,976,000 பெறுமதியான பொது நலவாய மாநாட்டிற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட மரத்தளபாடங்கள் CHOGM எனக் குறிப்பிடப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2014 சனவரி மாதம் வரையிலும் மீள அமைச்சிற்குக் கிடைக்கப்பெற்றமைக்கான சான்றுகள் இருக்கவில்லை.

(இ) பொது நலவாய மாநாட்டிற்கான இலச்சினைகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 2,741,600 தொகையும் மரத்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 187,855 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அப் பொருட்கள் இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் பிரிவு | - | அரசாங்க விடுதியில் குடியிருப்பதற்காக திருமணமாகிய உத்தியோகத்தரின் சம்பளத்தில் 12 ½ சதவீதம் வீட்டு வாடகையாக அறவிடப்பட வேண்டிய போதிலும் 40 ஏ, 40 சீ எனும் வீடுகளில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களின் சம்பளப் பத்திரங்களின் படி அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 ஆம் பிரிவு | | அரசாங்க சேவையில் உள்ள கணவன் மனைவி அரசாங்க விடுதியில் குடியிருக்கும் சந்தர்ப்பத்தின் போது கூடுதலான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரிடமிருந்து 12 ½ சதவீதமும் குறைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரிடமிருந்து 5 சதவீதமும் அறவிடப்பட வேண்டிய போதிலும் சமீட் |

| | | | |
|---|---|---|---|
| | | | வீடமைப்புத் திட்டத்தின் 40 பீ, 03 டீ, 05 சீ மற்றும் 117 தோட்ட வீடமைப்பு திட்டத்தின் சீ/3/2, டீ/4/1 மற்றும் ஏ/3/2 எனும் வீடுகளில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களின் வாழ்க்கைத்துணை அரசாங்க உத்தியோகத்தில் ஈடுபட்டிருப்பினும் அவர்களிடமிருந்து மேற்குறித்த வகையில் அறவிடப்பட்டமைக்கான சான்றுகள் குறித்த கோவையில் இருக்கவில்லை. |
| (iii) | XIX ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவு | | அரசாங்க விடுதியொன்று ஓர் உத்தியோகத்தருக்கு குடியிருப்பிற்காக ஒதுக்கப்படுகையில் அப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட குத்தகை நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ஓர் உடன்படிக்கையின் படி வழங்கப்பட வேண்டிய போதிலும் அத்தகை குத்தகை உடன்படிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 104(4), 109(1), 113(4) | 326,852 | 2012 ஆம் ஆண்டு வரை ஒதுக்கீட்டுக் கணக்குகளில் தொடர்ந்து குறிப்பிடப்பட்டிருந்த நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பாக குறித்த பிரமாணத்தின் பிரகாரம் அமைச்சுச் செயலாளரின் கையொப்பத்துடனான பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்படாதும் புத்தகத்தில் விலக்கல் கட்டளை மற்றும் உரித்துக் கைதவிர்ப்புக் கட்டளை என்பன இன்றியும் 06 நட்டங்களும் இழப்புகளும் |

| | | | |
|---|---|---|---|
| | | | 2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 104 மற்றும் 109 | 23,996,293 | ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்களில் 22 சந்தர்ப்பங்களுக்கு உரித்தான நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 106 | 1,091,828 | ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் மற்றும் இழப்புகளின் கீழ் காணப்படும் முறையற்ற பயன்பாட்டு பணத்தை மீள அறவிட்டுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களின் போது திறைசேரியிலிருந்து முற்பணம் பெறுவதன் மூலம் நட்டம் பதிவளிக்கப்படாது தொடர்ந்தும் கணக்கில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 109(1) மற்றும் 113(4) | 898,842 | ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த 07 நட்டங்களுக்கு உரித்தாக ஆண்டின் போது புத்தகத்திலிருந்து பதிவளிக்கப்பட்டும் அறவீடுகளுக்கு உரித்தான கோவைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>--------------------------- | | |
| | 2009 மே 04 ஆம் திகதிய 11/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | -- | ஏதேனுமோர் பதவிக்கு ஒதுக்கப்பட்ட ஓர் வீட்டைத் தவிர ஏனைய சகல வீடுகளினதும் குத்தகைக் காலம் 05 ஆண்டுகளான போதிலும், 2008 பெப்ரவரி 14 ஆம் திகதி அரசாங்க |

விடுதியொன்றில் குடியிருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்த ஓர் உத்தியோகத்தர் 06 ஆண்டு காலத்திற்கு மேலாக குடியிருந்த போதிலும் மேற்குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.7 வங்கிக் கணக்குகளின் செயற்பாட்டிலுள்ள குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) போலந்தில் உள்ள இலங்கை வர்சோ தூதரகத்தின் வங்கிக் கணக்குகள் தயாரிக்கப்படுகையில் காசேட்டு மீதியின் படி வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) லொஸ்ஸான்ஜலிஸ் இல் உள்ள இலங்கை தூதரகத்திலிருந்து திருடப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் (USD) 1,583 தொகை நட்டங்கள் மற்றும் இழப்புகளாக கருத்திற்கொள்ளப்படாது வங்கிக் கணக்கிணக்கத்தில் சீராக்கப்பட்டிருந்ததுடன் பாங்கொக்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இனங்காணப்படாத செலவு மீதி டீஎச்பீ (THB) 3,568 ஆகக் காணப்பட்டது.

(இ) ஜேர்மனியில் உள்ள இலங்கை பிராங்பேட் கன்சியூலர் காரியாலயத்தில் 2013 ஆகஸ்ட் 06 ஆம் திகதி சேகரிக்கப்பட்ட யூரோ (EURO) 795 தொகையான பணம் 2013 திசெம்பர் 31 வரையிலும் தேறியிருக்கவில்லை.

(ஈ) பிரான்ஸில் உள்ள பரிஸ் தூதரகத்திற்கு உரித்தான 2006 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டிராத நேரடி செலவு வைப்புக்கள் யூரோ (EURO) 49,373 ஆகக் காணப்பட்டது.

(உ) 2004 ஆம் ஆண்டு முதல் 03 இலங்கை தூதரகங்களிற்கு உரித்தான சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள் சீஏடீ (CAD) 2,086 தொகையும் யூரோ (EURO) 11,525 தொகையுமாகக் காணப்பட்டது.

(ஊ) 2003 ஆம் ஆண்டு முதல் 06 தூதரகங்களின் வங்கிக் கணக்கு மீதிக்கும் காசேட்டு மீதிக்கும் இடையே இணக்கமின்மைகள் ஆர்யூபீ (RUB) 27,128, அமெரிக்க டொலர் (USD) 4,228, பீஎல்என் (PLN) 2,341, ரீஎச்பீ (THB) 300,445, யூரோ (EURO) 1,527, யூஎன்டீ (UND) 7,209,311 மற்றும் ஜீபீபி (GBP) 10,880 ஆகக் காணப்பட்டது.

(எ) 2006 ஆம் ஆண்டு முதல் 02 இலங்கை தூதரகங்களில் இனங்காணப்பட்டிராத நேரடியான வரவு வைப்புக்கள் யூரோ (EURO) 21,648 ஆகக் காணப்பட்டன.

(ஏ) 2002 ஆம் ஆண்டு முதல் 04 இலங்கைத் தூதரகங்களில் தேறாத வைப்பு மீதி ஐக்கிய அமெரிக்க டொலர் (USD) 1,201, ஐஎன்ஆர் (INR) 3,936 மற்றும் யூரோ (EURO) 34,210 ஆகக் காணப்பட்டன.

## 1.8 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

### (அ) அறிக்கையிடப்படாத வாகன விபத்துக்கள்

---

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு உரித்தான எட்டு (08) வாகனங்களுக்கு நேர்ந்திருந்த நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பாக ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் அந் நட்ட இழப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் பொறுப்புகள் நிச்சயிக்கப்பட்டு நட்ட இழப்புகள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் 06 வாகனங்களுக்கு உரித்தாக கணிப்பிடப்பட்ட நட்டப் பெறுமதி ரூபா 2,401,451 தொகையாகக் காணப்பட்ட போதிலும் அந் நட்ட இழப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பழுதுபார்த்தல் செலவில் ஒரு பகுதி காப்புறுதி செய்யப்பட்டு எஞ்சியவை அரசாங்க நிதிகள் மூலம் செலவிடப்பட்டிருந்தது.

### (ஆ) ஆய்வுகள் பூர்த்திசெய்யப்படாத நட்ட இழப்புகள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டவாறு வெளிநாட்டு தூதரகங்களிற்கு உரித்தான 08 வாகன விபத்துக் கோவைகளிற்கு உரித்தாக கணிப்பிடப்பட்டிருந்த நட்டம் ரூபா 4,085,892 தொகையானதுடன் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆய்வு செய்யப்பட்ட அறிக்கைகளின் படி பொறுப்பு நிச்சயிக்கப்பட்டு நட்ட இழப்புகளை அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 1.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட சிக்கனமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) அமைச்சிற்கு உரித்தான பீ 20 ஆம் இலக்க அரசாங்க வீடுகளின் பொருத்துகளுக்காக கேடீஏ 75 வலுவுள்ள மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்படுவதற்காக இலங்கை மின்சார சபையால் ரூபா 2,997,340 தொகையான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அமைச்சால் கொள்வனவு நடைமுறை ஊடாக ஓர் வழங்குனர் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபா 3,481,632 இற்கு மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆகையால் அமைச்சிற்கு ரூபா 537,816 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட 03 நிபந்தனைகள் மீறப்பட்டிருந்ததுடன் மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்காகக் குறிப்பிடப்பட்டிருந்த 03 ஆண்டு உத்தரவாதக்காலமும் 01 ஆண்டு காலம் வரை வழங்குனரால் குறைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெளிநாட்டு தூதரகங்களில் சேவை முடிவுறுத்தப்பட்டு மீள இலங்கைக்கு வருகைதரும் உத்தியோகத்தர்களின் பயணப் பொதிகள் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படுவது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பயணப் பொதிகள் விடுவிக்கப்படுவதற்காக தொடர்ந்து நீண்ட கால தாமதம் நிலவுவது அவதானிக்கப்பட்டதுடன் இதற்காக

தண்டப்பணமாக பாரிய தொகை அமைச்சால் செலுத்தப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 13 பயணப் பொதிகளின் விடுவிப்பிற்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது தாமதக்கட்டணமாக ரூபா 305,140 செலுத்தப்பட்டிருந்தது. உத்தியோகத்தர்களால் ஏற்படும் தாமதக் கட்டணம் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கும் விடுவிப்பு பிரதிநிதியின் முறைகேட்டின் காரணமாக ஏற்படும் தாமதக் கட்டணம் அவர்களுக்குச் செலுத்தப்படுகையில் குறைக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டில் ரூபா 58,460,233 தொகை பயணப் பொதிகளுக்காக இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு தூதரக சேவைக்காகச் செல்கையில் கொண்டு செல்லக் கூடிய பயணப் பொதிகளின் அளவு தொடர்பாக எல்லை விதிக்கப்பட்ட சுற்றறிக்கை ஒன்று அமைச்சில் செயற்பாட்டில் இருக்கவில்லை.

(iii) வெளிநாட்டு சேவைக் கடமை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு மீள இலங்கைக்கு வருகை தரும் உத்தியோகத்தர்களின் பயணப் பொதிகள் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படுகையில் இது தொடர்பாக எல்லைகள் மற்றும் கட்டணங்களுக்கு உரித்தாக முறையான நடைமுறை அமைச்சால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டின் போது இது தொடர்பான விசாரணையின் போது 1968 யூன் 16 ஆம் திகதிய X333Y ஆம் இலக்க அமைச்சுச் சுற்றறிக்கை காலாவதியாகி இருந்தமையால் இதற்காக தெளிவான ஆலோசனைகள் அடங்கிய சுற்றறிக்கை விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதாக பதிலளிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் புதிய சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.10 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் வெளிநாட்டு சேவைகள் உத்தியோகத்தர்களின் விடுதி வசதிகள் வழங்கப்படுவதற்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் 2006 ஆம் ஆண்டு முதல்

2012 ஆம் ஆண்டு வரை ரூபா 70 மில்லியன் தொகை செலுத்தப்பட்டு 117 தோட்டம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அங்கு IV ஆம் கட்டம் வீடமைப்பு திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 20 வீடுகளின் உரிமையை உறுதிப்படுத்தப்படுவதற்கான உரித்துறுதி வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்படு நிலையில் இல்லாத இந்து சமுத்திர நடவடிக்கைகள் ஒன்றிணைவு நிறுவகத்திற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 3,825,000 விடுவிக்கப்பட்டிருந்தது.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான பதவியணி |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 255 | 231 | 24 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 359 | 279 | 80 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 134 | 131 | 03 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | -- | 22 | -- | 22 |
| | மொத்தம் | 755 | 668 | 109 | 22 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 109 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.